செ.வெ.எண்: 945 நாள்: 25/10/10

## செய்திக் குறிப்பு

தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய உயிரியல் பூங்காவான அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவுக்கு வருடத்துக்கு 17 இலட்சம் பார்வையாளர்கள் வருகை புரிகின்றனர். வன உயிரினம் மற்றும் இயற்கை குறித்த முக்கியத்துவத்தை பூங்காவிற்கு வருகை தரும் பார்வையாளர்களுக்கு விளக்கும் வகையில் "உயிரியல் பூங்கா வழிகாட்டிகள்" திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தாவரவியல், விலங்கியல், வனவாழ் உயிரியல் மற்றும் வனவியலில் இளநிலைப்பட்டம் பெற்று இளமைத்துடிப்பும், ஆர்வமும் உள்ள நபர்கள் பூங்கா வழிகாட்டிகளாகப் பணிபுரிய வரவேற்கப்படுகிறார்கள். தேர்வு பெற்றவர்களுக்கு தேவையான பயிற்சிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சித்துறையால் வழங்கப்படும். பயிற்சிகள் முடிந்து வெற்றி பெற்றவர்கள் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் "உயிரியல் பூங்கா வழிகாட்டிகளாகப்" பணியாற்ற அங்கீகார அட்டைகள் வழங்கப்படும். பூங்காவிற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் அவர்கள் சேவையைப் பயன்படுத்திக் கொள்வார்கள். இவ்வழிகாட்டிகள் விலங்குகள் பற்றியும், அவற்றின் சிறப்பு இயல்புகள் பற்றியும் சுவாரசியமாகப் பயணிகளுக்கு எடுத்துக் கூறுவார்கள். அவர்கள் வழிகாட்டிகளுக்கு உரிய தொகையையும் வழங்கிச் செல்வார்கள். உயிரியல் பூங்கா வழிகாட்டிகளாகப் பணிபுரிய ஆர்வமுள்ள நபர்கள் தங்கள் சுய விவரங்களுடன் தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் இயக்குநர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூர், சென்னை–48 என்ற முகவரிக்கு 15.11.2010 தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

Secretary to Government
Env. & Forests Department